## வாதி தரப்பு குறுக்கு விசாரணை

O.S.No. 723-2023 Date : 16-09-2025

பெயர் : சரவணன் பி.வா.சா.8

1) சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார். நான் இவ் வழக்கின் 1-ம்பிரதிவாதி மணி என்பவரின் மகன் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதியின் மகன் என எடுத்துரைப்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கின் விபரங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி ஜெயஸ்ரீ என்பவர் தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என தெரியுமா என்றால் தாவாசத்தில் தாங்கள் எவ்வித தடையும் செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2009 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்யப்படும் போது எனது தாய் மற்றும் தந்தை ஆகியோரை மட்டுமே தரப்பினராக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது தாய் மற்றும் தந்தையர் ஆகியோர் இருவரும் இறந்து விட்டதால் அவர்களது வாரிசு என்ற முறையில் அவரது வாரிசுகளாகிய எங்கள் மீது இவ் வழக்கு தொடரப்பட்டு வருகிறது என்றால் சரிதான்.

2) இவ் வழக்கில் எனது தாய் மற்றும் தந்தை ஆகியோரின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை எனது தந்தை மற்றும் தாயார் ஆகியோர் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்த விபரம் தெரியுமா என்றால் அவர்கள் இருவரும் பொது அதிகார ஆவணம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை. எனது தந்தை மற்றும் தாயாரின் கையொப்பம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் ITI படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் உள்ள கையொப்பம் எனது தகப்பனார் மணி என்பவரின் கையொப்பமா என்றால் இல்லை (சாட்சி இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை பெற்று அதை நன்கு பார்வையிட்டு அதிலுள்ள கையொப்பம் தன் தகப்பனார் மணி என்பவரின் கையொப்பம் கிடையாது என சாட்சியம் அளிக்கிறார்).

3) எனது தகப்பனார் வேறு வகையில் கையொப்பம் செய்வார். என்னிடம் காட்டப்படும் வக்காலத்து நாமாவில் உள்ள 1ம் பிரதிவாதி மணி என்பவரின் கையொப்பம் எனது தகப்பனாரின் கையொப்பமா என்றால் ஆம். என்னிடம் காட்டப்படும் வக்காலத்து நாமாவில் உள்ள 2வது கையொப்பம் எனது தாயார் முருகம்மாள் என்பவரின் கையொப்பமா என்றால் ஆம். (சாட்சி வக்காலத்து நாமாவை பெற்று நன்கு பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறார்). என்னிடம் காட்டப்படும் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் செய்துள்ள கையொப்பம் என் தகப்பனாரின் கையொப்பம் கிடையாது என சாட்சியம் அளிததுள்ள நிலையில் வேறு நபர் யாரேனும் எனது தகப்பனாரின் கையொப்பத்தை மாற்றம் செய்து எதிர் வழக்குரையில் போட்டு எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது தந்தை மற்றும் தாயாரின் கையொப்பம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பொது அதிகார ரத்து பத்திரம் ஆகும். பி.வா.சா.ஆ.8 ஆவணமானது எந்த சொத்து தொடர்பாக எந்த ஆவணத்தை ரத்து செய்து மேற்படி ரத்து பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் வி.ஆர்.ராமமூர்த்தி என்பவரின் பெயருக்கு எனது தாய் மற்றும் தந்தை எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்து எழுதப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் எனது தாய் மற்றும் தந்தை ஆகியோர் ஏற்கனவே எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் ஆவண எண் மற்றும் அதன் விவரங்கள் ஏதேனும் குறிப்பிட்டு பவர் ரத்து பத்திரம் எழுதப்பட்டுள்ளதா என்றால் பொது அதிகார பத்திரத்தின் விவரங்கள் எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் சொத்து விவரம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

5) பி.வா.சா.ஆ.8 ஆவணமானது எந்த சொத்து தொடர்பாக எழுதப்பட்டது என்றால் மனை எண்.5ற்கு வழங்கப்பட்ட பொது அதிகாரம் ரத்து செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனது தாய் மற்றும் தந்தையர் சொத்துகளை மனை பிரிவுகளாக ஏற்கனவே பிரித்து விட்டார்கள் என்றால் சரிதான். எத்தனை மனைகள் மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டது என்றால் 10 மனை பிரிவுகள் பிரிக்கப்பட்டது. மேற்படி வி.ஆர். ராமமூர்த்தி என்பவருக்கு மனை எண். 5 யை தவிர இதர மனைகளுக்கும் பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் அது பற்றி தெரியாது. எனது

தாயார் மற்றும் தந்தை ஆகியோர் வி.ஆர். ராமமூர்த்தி என்பவருக்கு மனை எண். 6 க்கு பொது அதிகார முகவராக நியமனம் செய்து மேற்படி முகவர் அந்த சொத்தை சுரேஷ் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

6) என்னிடம் காட்டப்படும் 10.03.2005 தேதியிட்ட சுரேஷ் என்பவர் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணம் மனை எண்.6 க்கு ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணம் என்றால் சரிதான். ( **10.03.2005 தேதியிட்ட பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள கிரய பத்திரம் ஆவண எண்.1053/2005 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மனை எண்.2 தொடர்பாக எனது தந்தை சரஸ்வதி என்பவருக்கு பொது அதிகாரம் கொடுக்கப்பட்டு அந்த சொத்தை ராஜகோபால் என்பவருக்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்ட விவரம் தெரியும். என்னிடம் காட்டப்படும் 31.01.2005 தேதியிட்ட ராஜகோபால் என்பவர் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணம் மனை எண்.2 க்கு ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணம் என்றால் சரிதான். ( **31.01.2005 தேதியிட்ட பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள கிரய பத்திரம் ஆவண எண்.345/2005 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7) மேலும் மனை எண்.1 ஐ எனது தாய் மற்றும் தந்தை ஆகியோர் தங்களது பொது அதிகார முகவர் சுரேஷ் என்பவர் மூலமாக மேனகா என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 27.10.2004 தேதியிட்ட சுரேஷ் என்பவர் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணம் மனை எண்.1 க்கு ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணம் என்றால் சரிதான். ( **27.10.2004 தேதியிட்ட பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள கிரய பத்திரம் ஆவண எண்.4482/2004 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழ் ஆவணத்தில் எனது தாய் மற்றும் தந்தையர் பொது அதிகார முகவர் மூலமாக அவர்களுக்கு சொந்தமான 10 மனை பிரிவுகளை விற்பனை செய்துள்ள பதிவு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். (**23.07.2024 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் இணையவழி தரவிறக்கம் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

8) என்னிடம் காட்டப்படும் 17.11.2008 தேதியிட்ட மோகனகிருஷ்ணன் மற்றும் எழிலரசி ஆகியோர் பெயரில் எனது தாய் மற்றும் தந்தையர் ஏற்படுத்திய கிரய ஆவணம் என்றால் சரிதான். ( **17.11.2008 தேதியிட்ட பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள கிரய பத்திரம் ஆவண எண்.4911/2008 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.16**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வா.சா.ஆ.16 ல் மனை எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் அந்த மனைக்குண்டான வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் 31.10.2008 தேதியிட்ட பிரபாகரன் மற்றும் மகஸேவரி ஆகியோர் பெயரில் எனது தாய் மற்றும் தந்தையர் தங்களது பொது அதிகார முகவர் லோகாம்பாள் ஏற்படுத்திய கிரய ஆவணம் என்றால் சரிதான். ( **31.10.2008 தேதியிட்ட பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள கிரய பத்திரம் ஆவண எண்.4673/2008 சான்றிட்ட நகல் .சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

9) வா.சா.ஆ.17 ல் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தின் அடிப்படையில் தான் பூரூபத்தில் மனை பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் எனது தாய் மற்றும் தந்தை பாப்பாத்தி என்பவரை தங்களின் பொது அதிகார முகவராக நியமனம் செய்து சுரேஷ் என்பவருக்கு 31.10.2008 அன்று கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 31.10.2008 தேதியிட்ட ஆவணம் எனது தாய் மற்றும் தந்தையர் ஏற்படுத்திய கிரய ஆவணம் என்றால் சரிதான். (**31.10.2008 தேதியிட்ட பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள கிரய பத்திரம் ஆவண எண்.4672/2008 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

10) திருநாவுக்கரசு மற்றும் சாவித்திரி ஆகியோர் என் உறவினர்களா என்றால் ஆம். மேலும் எனது தாய் மற்றும் தந்தை சாவித்திரி என்பவரை தங்களின் பொது அதிகார முகவராக நியமனம் செய்து மேகநாதன் என்பவருக்கு 20.03.2008 அன்று கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 20.03.2008 தேதியிட்ட ஆவணம் எனது தாய் மற்றும் தந்தையர் பொது அதிகார முகவர் மூலமாக ஏற்படுத்திய கிரய ஆவணம் என்றால் சரிதான். (**20.03.2008 தேதியிட்ட பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள கிரய பத்திரம் ஆவண எண்.1182/2008 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

11) எனது தந்தை விஜயா என்பவரை தன பொது அதிகார முகவராக நியமனம் செய்து முத்து என்பவருக்கு 04.02.2008 அன்று கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 04.02.2008 தேதியிட்ட ஆவணம் எனது தந்தையர் பொது அதிகார முகவர் மூலமாக ஏற்படுத்திய கிரய ஆவணம் என்றால் சரிதான். (04.02.**2008 தேதியிட்ட பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில்**

**பதிவாகியுள்ள கிரய பத்திரம் ஆவண எண்.388/2008 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வா.சா.ஆ.20 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண். 327/3 ல் அடங்கிய மனை எண்.8 ற்கு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி புல எண்.327/3 ல் அடங்கிய சொத்தானது எனது தந்தைக்கு மட்டுமே தனித்து பாத்தியமான சொத்து என்பதால் எனது தந்தை மட்டும் தனிப்பட்ட முறையில் பொது அதிகார முகவர் மூலமாக மனை எண்.8 ஐ விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். வி.ஆர். ராமமூர்த்தி என்பவர் என் தாய் தந்தைக்கு தெரிந்தவர் என்றால் சரிதான்.

12) எனது தாய் மற்றும் தந்தை மேற்படி வி.ஆர்.ராமமூர்த்தி என்பவரை தங்களின் பொது அதிகார முகவராக நியமனம் செய்து பாண்டியன் என்பவருக்கு 14.09.2005 அன்று கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 14.09.2005 தேதியிட்ட ஆவணம் எனது தாய் மற்றும் தந்தையர் பொது அதிகார முகவர் மூலமாக ஏற்படுத்திய கிரய ஆவணம் என்றால் சரிதான். (**14.09.2005 தேதியிட்ட பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள கிரய பத்திரம் ஆவண எண்.4448/2008 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

13) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் எனது தகப்பனாரின் கையொப்பம் என்றால் சரிதான். (சாட்சி வா.சா.ஆ.1 ஆவணத்தை பெற்று முழுவதுமாக பார்வையிட்டு தனது தகப்பனாரின் கையொப்பம் உள்ளதாக ஒப்புக் கொள்கிறார்). என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் பாஸ்கர் என்பவரை எனது தாய் மற்றும தந்தையர் பொது அதிகார முகவராக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என் தாய் மற்றும் தந்தையின் கையொப்பமா என்றால் ஆம். வா.சா.ஆ.2 ஆவணமானது மேற்படி பாஸ்கர் என்பவரை பொது அதிகார முகவராக நியமனம் செய்யப்பட்டது தொடர்பாக ரூ.6,00,000/– பெற்றுக்கொண்டதற்கான பணப்பற்று ரசீது என்றால் சரிதான். ஆனால் பாஸ்கர் என்பவரை பார்த்தது கிடையாது.

14) வா.சா.ஆ.1 ஆவணத்தில் மனை எண்.7 க்கு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாஸ்கர் என்பவர்

ஜெயஸ்ரீ என்பவருக்கு மனை எண்.7 ஐ கிரயம் செய்து கொடுத்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி பெயரில் மனை எண்.7 மார்ச் மாதம் 2005ம் ஆண்டு கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்ட நிலையில் அதன் பின்னிட்டு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படும் முன்பு வரையில் மேற்படி பாஸ்கர் மற்றும் வாதி ஜெயஸ்ரீ என்பவர் பெயரில் புகார் மனுவோ அல்லது வேறு ஏதேனும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் எனது தாயார் புகார் மனு கொடுத்திருந்தார்.

15) மேற்படி புகார் மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளனோ என்றால் இல்லை. தாவா சொத்திற்கு வாதி பெயரில் பட்டா வழங்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பட்டாவை ரத்து செய்ய எனது தாய் மற்றும் தந்தை ஏதேனும் மனு கொடுத்திருந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் 2015ம் ஆண்டு என் தகப்பனார் காலமான பின்னிட்டு மீண்டும் என் தாயாருடன் சேர்ந்து தாவா சொத்தில் அத்து மீறி நுழைய முற்பட்டேன் என்றால் இல்லை. நாங்கள்தான் அந்த இடத்தில் இருந்து வருகிறோம். மேற்படி சம்பவம் தொடர்பாக என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு நான் 3 ஆண்டுகள் தலைமறைவாக இருந்தேன் என்றால் அவ்வழக்கில் முன்பிணை பெற்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான்.

16) அவ்வழக்கில் என் மீது மற்றும் 4 நபர்கள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். **குற்ற இறுதி அறிக்கை வா.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கில் எனது தாய் தந்தையருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அந்த விவரத்தை என் வழக்கறிஞர் தெரிவித்தாரா என்றால் இல்லை. **இந்நீதிமன்ற இ.ம.எண்.02/2010 உத்தரவு மற்றும் உத்தரவு ஆணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்திற்கு பழைய ஆவணங்களை வைத்து என் தந்தை பெயரில் மின் இணைப்பு பெற்றிருந்தேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு அந்த மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான்.

17) மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டு அதில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்றால் சரிதான். W.P.No.2511/2015 உத்தரவு இணையவழி

தரவிறக்கம் வா.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2015ம் ஆண்டு வாதி தாவா சொத்தில் சுற்றுசுவர் கட்ட முயன்ற போது அதை தடுத்ததால் காவல் துறை பாதுகாப்பு வழங்க கோரி மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். **Crlop.No.11860/2015 உத்தரவு இணையவழி தரவிறக்கம் வா.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஜெய்சன் ஜேம்ஸ் என்பவர் எனது அக்கா 3ம் பிரதிவாதி தமிழ்ச்செல்வியின் மகன் ஆவார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் வசித்து வருவதாக சொல்லி உள்ளேனா என்றால் இல்லை.

18) 2011ம் ஆண்டுதான் தாவா சொத்திற்கு மின் இணைப்பு பெற்றேன் என்றால் சரிதான். எனது தாய் மற்றும் தந்தையருக்கு சொந்தமான சொத்துகளை மனை பிரிவுகளாக பிரிக்கவில்லை என எதிர்வழக்குரையில் சொல்லி உள்ளது தவறு என்றால் சரிதான். மேற்படி சொத்துகளை மனை பிரிவுகளாக பிரித்துள்ளோம். மேற்படி எதிர் வழக்குரையில் என் தாய் மற்றும் தந்தையர் வி.ஆர்.ராமமூர்த்தி மூலமாக 4 பொது அதிகாரம் கொடுக்கப்பட்டு அதில் அதன் மூலம் கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எதிர் வழக்குரையில் மேற்படி பொது அதிகார பத்திரம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது தவறானது என்றால் சரிதான். மேற்படி ராமமூர்த்தி மற்றும் பாஸ்கர் என்பவர் மீது மோசடியாக பொது அதிகார பத்திரம் எழுதி பெற்றதாக எனது தாய் மற்றும் தந்தையர் ஏதேனும் புகார் மனு கொடுத்துள்ளார்களா என்றால் புகார் கொடுத்துள்ளார்கள். அவ்வாறு புகார் கொடுத்திருந்தால் அது தொடர்பான சங்கதிகளை எதிர் வழக்குரையில் குறிப்பிட்டிருப்பார்கள் என்றும் அது போல் எதுவும் கொடுக்காததால் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

19) மேற்படி பாஸ்கர் என்பவர் தொகை எதுவும் கொடுக்கவில்லை என குறிப்பிட்ட நிலையில் மேற்படி பாஸ்கர் என்பவருக்கு எதிராக முரண்பட்ட கட்சி எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2012ம் ஆண்டு எனது தகப்பனார் காலமான பின்னிட்டு தாவா சொத்து தொடர்பாக ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளீரா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் மனை எண் அல்லது வீட்டு கதவு எண் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.7 ஆவணம் எந்த ஆண்டு வாங்கப்பட்டது என்றால் 2024ம் ஆண்டு செலுத்தப்பட்ட ரசீது ஆகும். பி.வா.சா.ஆ.7

ஆவணத்தில் எனது தந்தை பெயர் எம்.எஸ்.மணி என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எம்.மணி என குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.7 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.